024

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம்- 2021/2022**

**இரண்டாவது தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை**

**LLU6717- சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி: 15.09.2022** **நேரம்: மு.ப. 09.30 - மு.ப 10.30**

**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**ஒரு வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

1.ஐக்கிய நாடுகளுடைய நோக்கங்களாவன:

> [ ...]3. ஒரு பொருளாதார, சமூக, கலாசார அல்லது மனிதாபிமான தன்மையுடைய சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சர்வதேச ஒத்துழைப்பை அடைவது, மற்றும் இன, பால், மொழி அல்லது மத வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சகல மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் மதிப்பதும் முன்னேற்றுவதும் ஊக்கப்படுததுதலும் ஆகும்.

உறுப்புரை 1(3) ஐக்கிய நாடுகள் பட்டயம்

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் தொடர்பில் மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தலானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடிப்படை இலக்குகளில் ஒன்றாகும். மனித உரிமைகள் விதிமுறை அபிவிருத்திப் பணி மீது அவதானம் செலுத்தி ஐக்கிய நாடுகள் சபை, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்பு சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு முறை ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வாறு பங்களிப்பு செய்துள்ளது என்பதை ஆராய்க.

2. '...அனைத்து மனித உரிமைகளும் உலகலாவியது, பிரிக்கமுடியாதது, இடைச்சார்புடையது மற்றும் இடையுறவுள்ளது. சர்வதேச சமூகம் மனித உரிமைகளை ஒரு நியாயமான மற்றும் சமமான அடிப்படையில் ஒரே நிலையில் மற்றும் ஒரே மாதிரியான அழுத்தத்துடன் நடாத்த வேண்டும்'.

-Vienna Declaration and Programme of Action (1993)

மனித உரிமைகளை பல்வேறுபட்ட பரம்பரைகளுக்கு (Generations) வகுப்பாக்கம் செய்யப்பட்டதன் அடிப்படையில், மனித உரிமைகளுடைய பிரிக்கமுடியாத தன்மை, இடைச்சார்புடைய தன்மை, இடையுறவுள்ள தன்மை என்பது எதனைக் குறிக்கிறது என விமர்சன ரீதியாக கலந்துரையாடுக.

*-பதிப்புரிமை பெற்றது-*